











# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

## தேசிய பாடசாலை



# பாடசாலை மேம்பாட்டுச் செயற்றிட்ட அறிக்கை




## யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் - தேசிய பாடசாலை
## J/ Nelliady Madhya Maha Vidyalayam - National School

| | | | |
|---|---|---|---|
| No. of Students | : Male | - | 888 |
| | Female | - | 396 |
| | Total | - | 1284 |
| No. of Teachers | | - | 67 |
| Zonal Education Office | | - | Vadamaradchy |
| School | ID | - | 1008001 |
| | Census No | - | 09269 |
| | Tele Phone No. | - | 021 226 3017 |
| | Fax No. | - | 021 226 4141 |
| | E mail Id | - | nelliadymmv@gmail.com |
| | Website | - | www.nelliadycentral.com |

| | | |
|---|---|---|
| Name of the Principal | : | Mr.S.Sethurajah |
| Private Address | : | Inthiran Amman Kovilady,<br>Thunnalai North,<br>Karaveddy |
| Mobile No. | : | 071 847 5586<br>077 280 9265 |

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்




1. இரு மாடிக் கட்டடம் (நிக்கொட்)
2. ஆராதனை மண்டபம் (நிர்மாண வேலைகள் முடிவுறாத நிலையில்)
3. "ட" மண்டபம்
4. கற்றல் வள நிலையம் (நூலகம், ஆய்வுகூடம், த.தொ.தொ.நு.அலகு )
5. ஆண்கள் விடுதி
6. மைதான விஸ்தரிப்பிற்கென கொள்வனவுசெய்யப்பட்ட காணி
7. விளையாட்டு மைதானம்
8. திறந்தவெளி மேடை
9. செயற்பாட்டறைத்தொகுதி
10. மலசலகூடம் (பெண்கள்)
14. விவசாய ஆய்வுகூடமும் வகுப்பறைகளும்
15. பௌதிக, இரசாயன ஆய்வுகூடங்கள்
16. கந்தையா மண்டபம்
17. சிற்றுண்டிச்சாலை
18. சைக்கிள் தரிப்பிடங்கள்
19. மலசலகூடம் (ஆண்கள்)
20. அதிபர் விடுதி
21. ஆசிரியர் வள நிலையம் (வடமராட்சி வலயம்)
22. பிரதான நீர்த்தாங்கி
23. மலசலகூடத் தொகுதி (பழையது)
24. இராஜலிங்கம் மண்டபம்

## மகுடவாசகம்

“அறிவு ஒளிர சால்பு சிறக்க”

## கல்லூரியின் நோக்கு

“அறிவும் அக்கறையும் ஆளுமைத்திறனும் மானிட மாண்பும் மிளிரும்
இருபத்தோராம் நூற்றாண்டுக்கான சமூகத்தை உருவாக்கும்
உயர் கல்லூரியாக மலர்தல்”

## கல்லூரியின் பணிக்கூற்று

“ சமகால எதிர்காலக் கல்வித் தேவைகளை
தேசிய மற்றும் சர்வதேசரீதியில் நிறைவு செய்யும் வகையில்,
வினைத்திறன்மிக்க கள, வள, வசதிகளை ஏற்படுத்தி
ஒரு தலைசிறந்த கல்லூரியாக, உயர்ந்து
வடமராட்சி மற்றும் ஏந்துபிரதேச மக்களது
மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கான செயற்பாடுகளை
வினைதிறனுடன் முன்னெடுத்தல் ”

## Motto

*"Let Knowledge radiate; Culture burgeons"*

## The vision of the college

*"Blossoming as Higher college,*
*to shape a fitting society for the twenty – one century,*
*which combines knowledge, creative skills, personality and human dignity"*


## Mission Statement

*"A unique college, fulfilling at both national and Inter-national levels,*
*the contemporary and future educational needs*
*with efficient field and resourceful facilities,*
*to uphold the happy life of people in vadamaradchi and catchments areas."*

# J/NELLIADY MADHYA MAHA VIDYALAYAM

## National School

### ORGANIZATION STRUCTURE



# Programmee for School Improvement
# - Report -
## பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்
## – அறிக்கை –

**கல்லூரியின் வரலாற்றுச் சுருக்கம்.**



*கல்வியின் இலக்குகள் அடிப்படையில் மனித விழுமியத்தினையும் நாகரிக மேம்பாட்டினையும் நிலையாகக் கொண்டுள்ள போதிலும் காலவோட்டத்தில் மகிழ்ச்சிகரமான மனித வாழ்க்கை தேவைகளுக்கான கோரிக்கைகளால் காலத்திற்கமைவாகத் தினப்படுத்தி புதுப்பிக்கப்படுகின்றன. இவ்வகையில் இன்றைய தசாப்தத்தின் கல்விச்சுலோகமான "தரமான கல்வியூடாக தரமான சமூகம்" என்னும் இலக்கினை எய்தும் படியான கல்வி முயற்சிகள் முனைப்புடன் முன்னெடுக்கப் படுகின்றன. பொதுக்கல்விக் களமான பாடசாலைகளின் கல்விசார் கொள்கைளும் செயற்பாடுகளும் இவ்விரண்டு நோக்கிலேயே முடுக்கிவிடப்பட்டுள்ளன. பாடசாலைகள் யாவும் தத்தமது இலக்கு, நோக்கு, சக்தி, முகாமைத்துவத்தெளிவு என்பவற்றிற்கமைவாக இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நிலையில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இதற்கான பயணத்தில் பல தடைகளையும்தாண்டி இலக்குகளை இன்று அண்மித்திருக்கின்றது.*



Dr. C.W.W.கன்னங்கரா அவர்கள்

*எமது கல்லூரி யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 90 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட பாடசாலையாகும். உரிய திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டின் அடிப்படையில் முற்றுமுழுதாக அரசாங்கத்தினால் 1921இல் ஒரு அரசாங்க மாதிரிப் பாடசாலையாக (Government Model School) ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியானது, 1946 இல் அன்றைய கல்வி அமைச்சரும் "இலவசக் கல்வியின் தந்தை" எனப் போற்றப்படுபவருமான Dr.C.W.W.கன்னங்கர அவர்களது சமூகநீதிக்கல்விச் சிந்தனையின் வழி இலங்கை முழுவதிலுமாக அக்காலத்திலிருந்த தேர்தல் தொகுதிகளுக்கு ஒவ்வொன்றாக 54 மத்திய கல்லூரிகளை சகல வள வசதிகளுடனும் உருவாக்கப்பட்டவற்றில் யாழ்மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 4 மத்திய மகா வித்தியாலங்களில் வடமராட்சிக்கென ஒதுக்கப்பட்ட ஒரேயொரு மத்தியமகா வித்தியாலயம் இதுவாகும். மறைந்த சமவுடைமைவாதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன். கந்தையா அவர்களது தீர்க்கதரிசனம்மிக்க தீவிர அக்கறையால் வளம்பெற்று வளர்ந்த இக்கல்லூரியானது வடமராட்சி மக்களது கல்விச்சொத்தாக மேலெழுந்தது. நாடாளவிய ரீதியில் 5ம்தரப்புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்கள் இருபாலாரும் இக்கல்லூரியில் அனுமதிபெற்று இலவசமாக*






விடுதிகளில் தங்கிப்படித்த தங்கமான வரலாறு கொண்டது இக்கல்லூரி. இக்கல்லூரியின் பழையமாணவர்கள் நாடாளவியரீதியில் வசிப்பிடங்களைக் கொண்டவர்கள், இன்று தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தொழிலிலும் கல்வியிலும் வாழ்விலும் சிறந்து விளங்குகின்றனர்.


அக்காலத்தில் திட்டமிட்ட புறக்கிருத்திய செயற்பாடுகளில் இக்கல்லூரி இப்பிரதேசத்தில் முதன்மையான கல்லூரியாக திகழ்ந்தது. கடேற் தொண்டர் படையணி, சாரணர் படையணி என்பவற்றோடு கால்பந்து, கிரிக்கட் முதலான பெருவிளையாட்டுகளும் தடகள் விளையாட்டுக்களும் சிறப்பான முறையில் வளர்த்தெடுக்கப் பட்டிருந்தன. 1977 இல் நாட்டில் அரசியல் பிரச்சினைகள் முனைப் படைந்திருந்த நிலையில், உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.த. இராசலிங்கம் அவர்கள் தனது அரச நிதி ஒதுக்கீட்டின் மூலம் அழகானதும் நவீனத்துவம் உடையதுமான ஆராதனை மண்டபத்தினை கல்லூரிக்கென அமைத்துக் கொடுத்தார். பாடசாலை, மற்றும் கல்வித்திணைக்கள நிகழ்வுகள் மட்டுமின்றி சமூகத்தின் பொது நிகழ்வுகள் பலவும் இவ்வாராதனை மண்டபத்தில் கோலாகலமாக அரங்கேறின.



அழகிய முன்மண்டபம் 1987 ஆம் ஆண்டின் அழிவுக்கு முன்னும் பின்னும்




கால ஓட்டத்தில் இக்கல்லூரியின் பெண் மாணவர்களின் வகுப்புப் பிரிவுகள் இணைக்கப்பட்ட செல்லையா பள்ளிக்கூட கட்டிடத்தில் இயங்கவைக்கப்பட்டன. 1987இல் வடமராட்சி பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் இக்கல்லூரியின் கட்டுமானங்களில் பெரும்பாதிப்புக்கள் ஏற்பட்டன. கல்லூரியின் பிரதான நிர்வாகக் கட்டடம் இராசலிங்கம் ஆராதனை மண்டபம், நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடங்கள் முதலான வளங்கள் முற்றாக சேதமடைந்தன. இதன் பின்னர் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் பலவீனமடைந்ததுடன் உயர் நிலையில் இருந்த புறக்கிருத்தியங்களும் வெகுவாய் பாதிப்புற்றன. இதற்கு முன்னைய காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே சிறப்பாக செயற்பட்டு வந்த இக்கல்லூரியின் கடேற் தொண்டர் படையணியின் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன. வருடா வருடம் தியத்தலாவை வரை பயிற்சி பெற்ற கடேற் தொண்டர் படையணிக்கு 1960 களில் 2ம் லெப்ரினனட் திரு வ.பாலேந்திரன், திரு. அருளையா ஆகியோர் ஆற்றிய பணிகள் இன்றும் நினைவு கூறப்படுகின்றன. 1987இன் பின்னர் இக்கல்லூரியின் மற்றும் கல்விச் செயற்பாடுகள் தளம்பலுற்று நலிவடைந்த நிலையில் நாட்டு சூழ்நிலை காரணமாக மாணவர் பலர் புலம் பெயர்ந்த காரணங்களினால் குறிப்பாக ஆண் மாணவர்கள்



வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தமையால் ஆண் மாணவர்களது எண்ணிக்கை வெகுவாய் குறைவடைய நேரிட்டது.

அண்மைய 1990களில் இக்கல்லூரியின் தோற்ற இலக்கினை மறந்து குறுகிய நோக்கில் ஆண்/பெண் என இரு பாடசாலைகளாகப் பிரித்தமையானது ஏற்படுத்திய நன்மைகளைவிடத் தீமைகளையே அதிகமாக்கியது. வலுவான ஒரு மாணவர் தொகை நலிவாயிற்று. யுத்த அனர்த்தத்தினால் பௌதிகவளங்கள் பாதிக்கப்படலாயின. மாணவர் எண்ணிக்கையும் குறைவடைந்தது. இந்நிலையில் பொறுப்பேற்ற அதிபர்கள் மிக்க சிரமங்களின் மத்தியில் ஒரு தரமான பாடசாலையாக மீண்டும் கொண்டுவருவதற்கு முயன்றனர். ஓய்வுபெற்ற அதிபர் திரு.சி.சிற்றம்பலம் அவர்கள் கல்லூரியின் தரத்தினைத்தக்கவைக்கும் பணியில் நெருக்கடிமிக்க காலத்தில் சிறப்பாக ஈடுபட்டார். கல்வி, விளையாட்டு ஆகிய இருதுறைகளிலும் மீண்டும் கல்லூரி தன்னம்பிக்கையுடன் மீண்டெழத் தொடங்கியது. இதன்பின்னரான இன்றைய கல்லூரி நிர்வாகம் நவீன கல்விச்சீர்திருத்த இலக்குகளோடு நிலைத்த அபிவிருத்திக்கான செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்து தரரீதியான பல அடைவுகளை ஈட்டி தேசியரீதியில் தரம்மிக்க ஒர்கல்லூரி என்னும் இலக்கினை நோக்கி வெற்றிகரமாகப் பயணிக்கின்றது. நவீன முகாமைத்துவ எண்ணக்கருக்களின் அடிப்படையில் பாடசாலைச்சமூகத்தினரான பெற்றோர், பழையமாணவர்கள் அனைவரையும் ஆரோக்கியமான விதத்தில் உள்வாங்கி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தி கடினமான பல இலக்குகளைக்கூட எட்டிப்பிடித்துள்ளது.


கல்லூரியானது ஸ்தாபிக்கப்பட்டு தொண்ணூறாம் ஆண்டு நிறைவினைக் (1921 - 2011) கொண்டாடிக் கொண்டிருந்தவேளை 2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் 06ஆம் திகதியிலிருந்து வடமராட்சிப் பிரதேசத்தின் ஒரேயொரு தேசியப் பாடசாலையாக கல்வி அமைச்சினால் தரமுயர்த்தப்பட்டமை கல்லூரியின்பால் அக்கறை கொண்டிருந்த அனவருக்கும் பெரும் மகிழ்வினை ஏற்படுத்தவல்ல ஒரு நிகழ்வாக அமைந்தது.



மாணவர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதுடன் இதில் பெண் மாணவர்களது எண்ணிக்கை சுமார் 450ஆக அதிகரித்தமையானது கல்லூரியில் தோற்றத்தின் நோக்கத்தினை மீண்டும் நிறைவு செய்துள்ளது. மாணவர்விடுதி, பாடசாலைத்தோட்டம், விளையாட்டுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, விளையாட்டு மைதான விஸ்தரிப்பு, கணனி ஆய்வுகூடங்கள், வகுப்பறைக் கட்டிடங்கள், ஆராதனை மண்டபம், சுற்றுப்புற அழகு, மாணவர்கல்வி அடைவு, ஒழுக்கம், கட்டுப்பாடு, இணைப்பாடவிதான சாதனைகள், ஆங்கில மொழிமூல கல்விமேம்பாடு, மாணவர் சிற்றுண்டிச்சாலை வசதிகள், முதலுதவி அலகு, ஆண்/பெண் சாரணியம், மாணவர் கடேற் அணி, கூடைப்பந்தாட்டத்திடல், முகாமைத்துவ மேம்பாடு முதலான அனைத்து விடயங்களிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று ஓர் உதாரண கல்லூரியாக இக்கல்லூரி திகழ்கின்றது.

# Fundamentals of Successful School Education

## Major Issues in Sri Lankan Education



## எமது கல்லூரியில் "பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்"

பாடசாலைகளிலுள்ள பயனாளிகளிடம் அவர்களது பாடசாலை தொடர்பான பெருமித உணர்வை உருவாக்குவதன்மூலம் அவர்களது அர்ப்பணிப்பை வேகப்படுத்தி பாடசாலையைப் பயன்மிகு நிறுவனமாக மாற்றுதல் என்னும் அடிப்படை எண்ணக்கருவுடன் நடைமுறைப்படுத்தப்படும் "பாடசாலை மேம்பாட்டுத் திட்டம்" 2006 ஆம் ஆண்டு இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டதோடு இதன்மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் 2008 இல் 35 கல்வி வலயங்களுக்கு பரவலாக்கப்பட்டதுடன் நாட்டிலுள்ள அனைத்து "இசுறு பாடசாலை"களிலும் நடைமுறைப் படுத்தப்பட்டது. வடமராட்சி வலயத்தின் அனைத்துப் பாடசாலைகளுக்கும் 2009 இல் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் எமது கல்லூரியிலும் அவ்வாண்டு முதலே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் மற்றும் நலன் விரும்பிகளோடு நெருங்கிய தொடர்புகளைப் பேணி அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துவந்த எமது கல்லூரி முகாமைத்துவ அணியினருக்கு அவ்வனுபவங்கள் மற்றும் பெற்றுக்கொண்ட தேர்ச்சிகளின் மூலம் பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது இலகுவானதாகவும் ஆர்வத்தினை ஏற்படுத்துவதாகவும் அமைந்தது. இதனடிப்படையில் 2009 ஆம் ஆண்டு முதல் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் எமது கல்லூரியில் சிறப்புற நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் முக்கிய முகாமைத்துவப் பண்புகளான ஜனநாயகத்தன்மை, வெளிப்படைத் தன்மை, வகைகூறும் தன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எமது கல்லூரியின் முகாமைத்துவ நடைமுறைகள் காணப்பட்டு வந்தமையால் கல்லூரியின் ஆளணிவளத்தை உச்சப் பயன்பாட்டோடு முகாமைசெய்ய முடிந்ததுடன் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்ட கல்லூரிச் சமூகத்தையும் ஏனைய நிறுவனங்களையும் ஒன்றிணைத்து கூட்டு முயற்சியாக கல்லூரியின் வளத்தினைப் பயனுறுதியுடன் பயன்படுத்தவும் மேலும் மேம்படுத்தவும் முடிந்தது. கல்லூரியில் காணப்பட்ட பிரச்சினைகளை எல்லா மட்டங்களிலும் இனங்கண்டு, கலந்துரையாடி, முன்னுரிமைப்படுத்தி, செயற்றிட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பௌதிகவள வசதிகளிலும் பாடவிதான, இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் ஆரோக்கியமான அபிவிருத்தி நிலையை எய்தியதினூடாகவும் இப்பிரதேசத்தின் ஒரேயொரு "தேசியப் பாடசாலை" என்ற சிறப்புடனும் வடமராட்சிப் பிரதேசத்தின் ஒரு முன்னணிப் பாடசாலையாக உருவெடுத்து வருவதற்கு ஆவன செய்துள்ளோம்.

கல்லூரியின் அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் திட்டமிடவும் ஒழுங்கமைக்கவும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் கல்லூரிச் சமூகத்தினுடனான தொடர்புகளைப் பேணவுமென முக்கியமான இரு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

01. பாடசாலை அபிவிருத்திக் குழு (School Development Committee)

02. பாடசாலை முகாமைத்துவ அணி (School Management Team)

இவ்விரு அமைப்புக்களினதும் செயற்பாடுகளினூடாக கல்வித்தர முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் போன்றன சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன.

- பாடசாலை அபிவிருத்திக் குழு (School Development Committee) - விபரம்.

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | : | திரு.செ.சேதுராஜா | (அதிபர்) |
| உப தலைவர்கள் | : | திரு.க.கிருஷ்ணகுமார் | (பிரதி அதிபர் - நிர்வாகம்) |
| | | திரு.அ.அரியரத்தினம் | (பிரதி அதிபர் - கல்வி அபிவிருத்தி) |
| செயலாளர் | : | திரு.ஆ.ஜெயக்குமார் | |
| உப செயலாளர் | : | திருமதி.இ.சிவராஜா | (பகுதித் தலைவர்) |
| பொருளாளர் | : | திரு.ச.உருத்திரகுமார். | |

- பாடசாலை முகாமைத்துவ அணி (School Management Team)

01. திரு.செ.சேதுராஜா (அதிபர்)
02. திரு.க.கிருஷ்ணகுமார் (பிரதி அதிபர்)
03. திரு.அ.அரியரத்தினம் (பிரதி அதிபர்)
04. திருமதி.இ.சிவராஜா (பகுதித் தலைவர்)
05. திருமதி.ம.நற்குணலிங்கம் (பகுதித் தலைவர்)
06. திரு.ச.சரவணபவன் (பகுதித் தலைவர்)
07. திரு.ச.உருத்திரகுமார் (பகுதித் தலைவர்)
08. திரு.வீ.சுதர்சன்
09. திரு.செ.ஞானச்செல்வன்
10. திருமதி.ம.விக்னேஸ்வரன் (குணவள உள்ளீடு)
11. திருமதி.சா.ஸ்ரீஸ்குமார்
12. திருமதி.யோ.கந்தப்பு
13. திரு.த.தவச்செல்வம் (விளையாட்டு)
14. திரு.ஏ.விஜிதரன் (விசேட கல்வி)
15. திருமதி.ச.கீர்த்தனா (வழிகாட்டலும் ஆலோசனையும்)

**சமூகத்துடனான தொடர்பு**

பாடசாலை அபிவிருத்திக்கு சமூகத்தை இணைத்தல் என்பதன்மூலம் கல்லூரியின்பால் பெருமித உணர்வுடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பழைய மாணவர்களின் உதவியுடன் பழைய மாணவர் சங்கத்தினூடாகப் பல உதவிகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் சில.

- அச்சு இயந்திரம் (Digital Duplicator Machine)
- போட்டடோ பிரதி இயந்திரம்
- பல்லூடக எறியி (Multi Media Projector)
- கலையரங்கத்திற்கான கதிரைகள்
- கலையரங்க மேடைத் திரைச்சீலைகள்
- கலையரங்க ஒலிபெருக்கி உபகரணத் தொகுதி
- கணனி அய்வுகூடத்திற்கான கணனித் தொகுதி
- அலுவலகத்திற்கான அதிதிகள் இருக்கைத் தொகுதி
- சிற்றுண்டிச்சாலை புனர் நிர்மாணமும் தளபாடங்களும்

கல்லூரியின் நலன்விரும்பிகளான திரு.திருமதி.பாஸ்கரன் தம்பதியினரால் அழகிய வள்ளுவர் மாடமும் சொரூபமும் அமைத்தத் தரப்பட்டுள்ளன.

பெற்றோரின் உதவியுடன் கல்லூரியின் அத்தியாவசியத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டு வருகின்றன. பாடசாலைகளை விட்டு வெளியேறிய பிரதேச மாணவர்களின் நன்மைகருதி முறைசாராக் கல்விப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டு பாடநெறிகள் நடைபெற்று வருகின்றன. இப்பிரிவிற்கான பயிற்சி உபகரணங்கள் "ஊற்று" நிறுவனத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

**கல்லூரியின் அபிவிருத்திக்குழுவின் நிதிமூலங்கள்.**

- அரச நிதி
- அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதிகள்
- நலன்விரும்பிகளின் நன்கொடைகள்
- பழைய மாணவர் சங்கம் மற்றும் தனிப்பட்ட பழையமாணவர்களின் உதவிகள்
- கல்லூரிக் கலையரங்கு மற்றும் மைதானத்தில் வெளி நிகழ்ச்சிகள் நடத்தப்படும்போது பெறப்படும் வாடகை.
- கல்லூரித் தோட்டத்தின் மூலமாகக் கிடைக்கும் வருமானம்.
- சிற்றுண்டிச்சாலை
- பரிசுகள், ஊக்குவிப்புக்கள்.

**வகைகூறல்.**

கல்லூரிச் சமூகத்தின் நன்மதிப்பையும் பற்றுறுதியையும் வளர்த்தெடுப்பதற்கு முகாமைத்துவம் ஜனநாயகத்தன்மையுடனும் வகைகூறும் தன்மையுடனும் செயற்பட வேண்டும் என்பது பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய பண்பாகும். எமது கல்லூரி வகைகூறலின் சுட்டியாகப் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.

- பாடசாலை அபிவிருத்திக்குழுவின் செயற்பாடுகள் முறையான அனுமதியினைப் பெற்றிருத்தல்.
- செயற்றிட்டங்கள் ஒளிவுமறைவின்றி பகிரங்கத் தன்மையுடன் நடைபெறுதல்.
- வரவு செலவுத் திட்டமும் கணக்கறிக்கையும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியினைப் பெற்றிருத்தல்.
- தேசிய மட்டத்தில் கல்வியமைச்சின் அனுசரணையுடன் AAT நிறுவனத்தினால் தேசியப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட சிறந்த கணக்கறிக்கை மற்றும் செயற்பாட்டறிக்கைப் போட்டியில் பங்குபற்றி பாராட்டு விருதையும் சான்றிதழையும் பெற்றிருத்தல்.
- உரிய பதிவேடுகள் ஆவணங்கள் பேணப்பட்டு கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருத்தல்.

கல்லூரியின் பாடவிதான இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் நடைபெற்று வருகின்றன.

- **பாடவிதானச் செயற்பாடுகள்.**

  மாணவர்களுக்கான அன்றாட வகுப்பறைச் செயற்பாடுகள் கலைத்திட்ட நடைமுறைகளுக்கேற்ப கல்லூரியின் முகாமைத்துவ அணியினரால் திட்டமிடப்பட்டு அமுலாக்கப்படும் அதேவேளை உள்ளக மேற்பார்வை நடவடிக்கைகளின்மூலம் வழிப்படுத்தப்படுவதுடன் குறைபாடுகளும் தேவைகளும் இனங்காணப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

  40 நிரந்தர வகுப்புப்பிரிவுகளுக்கும் மொழிமூலம் மற்றும் உயர்தர வகுப்புக்களில் பாடங்களின் அடிப்படையிலும் சமகாலத்தில் நடைபெறக்கூடிய வகுப்புக்களுக்குமாக போதிய நிரந்தர வகுப்பறைகள் காணப்படாத நிலையில் வலயக் கல்வி அலுவலகத்தின் உதவியோடு தற்காலிக அரைநிரந்தர வகுப்பறைகள் அமைக்கப்பட்டு பாவனையிலுள்ளன.

  க.பொ.த(சா/த), க.பொ.த.(உ/த) வகுப்பு மாணவர்களுக்கு மாலைநேர மேலதிக வகுப்புக்கள் கடந்த காலங்களில் நடத்தப்பட்டு வந்துள்ளன. இதனைவிட கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இடர்ப்படும் மாணவர்களுக்கான இரவுநேர வகுப்புக்கள் பெற்றோரின் சம்மதத்துடனும் திணைக்கள அனுமதியுடனும் நடத்தப்பட்டு வந்துள்ளன.

- **கல்விசார் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்.**

  திணைக்களரீதியிலும் தனிப்பட்ட அமைப்புக்ளினாலும் நடத்தப்பட்டுவரும் கல்விசார் போட்டிகளில் எமது மாணவர்களின் பங்களிப்பு ஊக்குவிக்கப்படுவதுடன் அவற்றுக்கான பயிற்சிகளையும் துறைசார்ந்த ஆசிரியர்கள் வழங்கிவருகின்றார்கள். இதனூடாக கடந்த காலங்களில் குறிப்பாக கணிதம், தமிழ் மற்றும் ஆங்கிலத் துறைசார் போட்டிகளில் தேசிய மட்டம் வரை பல சிறந்த பெறுபேறுகளினையும் பெற்றுக்கொள்ளமுடிந்துள்ளது.

- **விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிச் செயற்பாடுகள்.**

  வாரநாட்களில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய 4 நாட்களிலும் காலை ஆராதனையைத் தொடர்ந்து மைதானத்தில் சகல மாணவரும் பங்கேற்கும் வகையில் சகல ஆசிரியர்களினது பிரசன்னத்தோடு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட இசைக்கேற்ப 12 நிமிடங்கள் கொண்ட உடற்பயிற்சி நிகழ்வு கடந்த பல ஆண்டுகளாகத் தவறாது நடைபெற்று வருகின்றது.

  கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் மிகவும் சிறப்பான ஒழுங்கமைப்பில் வருடந்தோறும் பெப்ரவரி மாத முதல்வாரத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண், பெண் என இருபாலாருக்குமான தடகள மற்றும் பெரு விளையாட்டுக்கள், வீதியோட்டநிகழ்வுகள் என அனைத்தையும் உள்ளடக்கியதாக இவ்விளையாட்டு நிகழ்வுகள் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்விற்குப் பிரதம அதிதிகளாகக் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களை அழைப்பது பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளின் ஒத்துழைப்புடன் பெரு விழாவாகவே வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்விளையாட்டுப் போட்டிகளில் மேற்கொள்ளப்படும் அவதானிப்பு மற்றும் மதிப்பீடுகளின் அடிப்படையில் கல்லூரியின் விளையாட்டு அணிகளுக்கான வீரர், வீராங்களைகள் தெரிவு செய்யப்பட்டு மேலதிக பயிற்சிகளோடு ஏனைய போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தயார்ப்படுத்தப் படுகின்றனர். சதுரங்கம், வலைப்பந்தாட்டம், கிரிக்கற் போன்றவற்றுக்கு வெளியிலிருந்து பயிற்றுவிப்பாளர்கள் ஒழுங்குசெய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
2012 ஆம் ஆண்டு எமது கல்லூரியின் 15 வயது பெண்கள் கபடி அணி தேசியமட்டத்தில் முதலாமிடத்தினைப் பெற்று வரலாற்றுச் சாதனையைப் படைத்து வடமாகாணத்திற்கே பெருமை சேர்த்தமை குறிப்பிடத்தக்கது.

- **ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்.**

*01.* **சாரணியம்.**

ஆண், பெண் சாரணர் படையணிகள் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. 2010 இல் இரு மாணவர்கள் “ஜனாதிபதி சாரணர் விருது” பெற்றுக்கொண்டுள்ளதோடு 2013 ஆண்டும் ஒரு தொகுதி பெண் சாரணர்கள் அவ்விருதுக்காக விண்ணப்பித்து, சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர்.

*02.* **மாணவர் தொண்டர் படையணி (கடேற்)**

எமது கல்லூரியின் கடேற் அணிகள் 1960களில் சிறப்பாகச் செயற்பட்டு தேசியமட்டச் சாதனைகள் பலவற்றை புரிந்திருந்தன. பிற்காலத்தின் யுத்த சூழ்நிலைகளின் பின்னர் தற்போது மீண்டும் எமது கல்லூரியின் கடேற் அணிகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.


*03.* **மாணவர் மன்றச் செயற்பாடுகள்**


இப்பாடசாலையில் மாணவர் மன்றச் செயற்பாடுகள் கிரமமாகவும் பல்துறைசார்ந்தும் இடம்பெற்று வருகின்றன. வாராவாரம் புதன்கிழமைகளில் 40 நிமிடநேரம் திட்டமிட்ட இச்செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகின்றது. மாணவர் கலை மன்றங்களும் (கனிஸ்ட, சிரேஸ்ட) பாடரீதியான மன்றங்களும் (கணித விஞ்ஞானம், ஆங்கிலம்) ஒன்றுவிட்ட வார ஒழுங்கில் மாணவர்களால் முறையாக நடத்தப்பட்டு வருகின்ற அதேவேளையில் தேவைகருதிய பல விசேட மன்றங்களும் இயங்கிவருகின்றன.
அவையாவன,

- சுற்றாடல் கழகம் – சுற்றாடல் மேம்பாட்டுச் செயற்பாடுகள் (டெங்கு ஒழிப்பு உட்பட)
- சுகாதாரக் கழகம் – மாணவர்களது சுகாதாரம் போஷாக்குச் செயற்பாடுகள் (சிறந்த முறையில் உருவாக்கப்பட்ட முதலுதவிப் பிரிவு உள்ளது)
- சாரணர் படையணி ஆண், பெண்) – பாடசாலையிலும் சமூகத்திலும் சேவையாற்றி வருகின்றன.
- வலு முகாமைத்துவக்குழு – வலு முகாமைத்துவ முன்னோடிச் செயற்றிட்டங்களை அமுலாக்குதல்
- தகவல் தொடர்பாடல் கழகம் – தகவல் தொடர்பாடல் மேம்பாட்டுச் செயற்பாடுகள்
- சமய மன்றங்கள் (இந்து, கிறிஸ்தவ) – வாராந்த ஆராதனை நிகழ்வுகள், சமயம் சார் விசேட நிகழ்வுகள் (நவராத்திரி, ஒளிவிழா)
- போக்குவரத்துக் கழகம் – மாணவரின் அன்றாட போக்குவரத்து ஒழுங்குகள்
- யுனெஸ்கோ கழகம் – மாணவர் தலைமைத்துவ மற்றும் இடைவினை மேம்பாடு
- மதர் ஸ்ரீலங்கா மன்றம் – வருடாந்த தேசப்பற்றுசார் மதர் ஸ்ரீ லங்கா நிகழ்ச்சிகள், போட்டிகள்
- அனர்த்த முகாமைத்துவக்குழு

## பாடசாலை நூலகச் செயற்பாடுகள்








*எமது கல்லூரியின் சிறப்பு வாய்ந்த நூலகம் 1987ஆம் ஆண்டில் அநர்த்தங்களினால் அழிவுற்றபின்னர் பல ஆண்டுகளாக ஒதுக்கப்பட்ட சிறிய பகுதிகளில் இயங்கிவந்தது. நீண்ட காலங்களின் பின்னர் இரண்டாவது பொதுக்கல்வித் திட்டத்தின் (புநீ-2) கீழ் உலக வங்கியின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட அழகிய நூலகம் 2002.05.30 அன்று அப்போதைய கௌரவ கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷஅவர்களினால் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் பல்வேறு கட்டங்களில் நூலகத்திற்கென ஆயிரக்கணக்கான நூல்களும் தளபாடங்களும் கணனி உபகரணங்களும் பெறப்பட்டு தற்போது 7500 க்கும் மேற்பட்ட நூல்களுடன் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிறப்பான ஒரு அறிவுவழங்கும் சேவையினை ஆற்றி வருகின்றது. மாதாமாதம் புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு மாணவர்களின் மேலதிக கற்றலுக்கும் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கும் அளப்பரிய சேவையாற்றி வருகின்றது. கடந்த காலங்களில் (2011) உட்பட வலயமட்டத்தில் சிறந்த நூலகமாகத் தெரிவு செய்யப்பட்டு புத்தக அன்பளிப்புக்களும் சான்றிதழ்களும் பெறப்பட்டுள்ளன. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நூல்களை இரவல் வழங்கும் சேவை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. நூலகத்திற்கென அபிவிருத்திக் குழு ஒன்று அமைக்கப்பட்டு நூலக ஆசிரிர்கள் இருவரின் சேவை தொடர்ச்சியாகப் பெறப்பட்டு நூலகம் சிறப்பாக இயங்கி வருகின்றது.*


*தரம் 6– 9 வரையான வகுப்பு மாணவர்களுக்கென கனிஷ்டபிரிவு நூலகமொன்று உருவாக்கப்பட்டு அச்சேவையும் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றது. மாணவர்களும் ஆசிரியர்களும் தமது பிறந்த தினங்கள், அன்பானவர்களின் நினைவு தினங்கள் என்பவற்றில் கல்லூரி நூலகத்துக்கு நூல்களை அன்பளிப்புச் செய்யும் முன்மாதிரியான செயற்பாடுகளும் நடைபெறுகின்றன.*





## கணனி நிலையங்கள்









கல்லூரியின் கணனி நிலையங்கள் இரண்டு சிறப்பாக உருவாக்கப்பட்டு மாணவர்களதும் ஆசிரியர்களதும் கணனிக் கல்விக்கும் தேவைகளுக்கும் வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பொதுக்கல்விச் செயற்றிட்டம் - 2 இன் மூலம் உருவாக்கப்பட்டு உபகரணமயப்படுத்தப்பட்ட கணனி ஆய்வுகூடமானது உள்ளக வலையமைப்புடன் கூடிய 10 கணனிகளுடன் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கேற்ப பயன்படுத்தப்பட்டு வரும் அதேவேளை கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் அநுசரணையுடன் வலுப்படுத்தப்பட்ட 22 கணனிகளுடன் கூடிய இரண்டாவது கணனி ஆய்வுகூடமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதைவிடவும் EKSP செயற்றிட்டத்தின்கீழ் 2011.05.28 அன்று 5 கணனிகள் வழங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்வியமைச்சின் கலைத்திட்டத்திற்கு அமைவாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கணனிப் பயிற்சிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொடர்பாடல் தொழினுட்ப மன்றத்தினூடான பொதுக் கலைத் திட்டத்திற்குப் புறம்பான பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


இறுதியாக நடைபெற்ற கணனிப் பயன்பாட்டு மதிப்பீட்டுப் போட்டியான "தேசிய தகவல் தொழினுட்ப விருது - 2009" இல் வெற்றி பெற்று சான்றிதழ்களையும் கணனி உபகரணங்களுக்கான விசேட நிதி ஒதுக்கீட்டினையும் (300,000/-) எமது கல்லூரி பெற்றுக்கொண்டது.




**சிற்றுண்டிச்சாலை வசதிகள்**

*கடந்த 2011ஆம் ஆண்டு கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையானது பழைய மாணவர் சங்கத்தின் நிதியுதவியுடன் சிறந்த முறையில் நவீனமயப்படுத்தப்பட்டு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் சிறப்பாகச் சேவையாற்றி வருகின்றது. வாராவாரம் இக்கல்லூரியில் நடைபெறும் கல்விசார் பொது நிகழ்வுகளுக்கும் சிறப்பான சிற்றுண்டிச் சேவையினை இதனால் வழங்க முடிகின்றது. பாடசாலையின் விளையாட்டுக் குழுவின் முகாமைத்துவத்தில் அதிபர், பிரதி அதிபர்களின் மேற்பார்வையின் கீழ் சிறப்பாக இயங்கிவருகின்றது. பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைச் சுற்றுநிருபத்திற்கு அமைவாக மாணவர்களுக்கான சேவை சுகாதார முறைப்படியும் சேவை அடிப்படையிலும் வழங்கப்பட்டு வருகின்றது. இலாபநோக்கிலன்றி சேவைநோக்கில் நடத்தப்பட்டுவரும் பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில் பெறப்படும் வருமானமானது மாணவர்களது விளையாட்டுத் துறைக்கும் ஏனைய நலனோம்பு நடவடிக்கைகளுமாக திட்டமிட்ட அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது. 2012 – ஒக்ரோபர் 01 உலக சிறுவர் தினத்தன்று ஆசிரியர்களின் பெருமளவான நிதிப் பங்களிப்புடன் இலத்திரனியல் முறையில் இயங்கும் நீர் சுத்திகரிக்கும் இயந்திரமொன்று சிற்றுண்டிச் சாலையில் பொருத்தப்பட்டு மாணவரின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. கல்லூரியின் சுகாதாரக் குழுவின் அங்கத்தவ மாணவர்கள் சுத்திகரிக்கப்பட்ட நீரினை வகுப்பு ரீதியாகவுள்ள நீர்க்கொள்கலன்களில் பகிர்ந்தளிப்பதற்கு உதவிவருகின்றனர்.*










## மாணவர்களுக்கான சுகாதார மேம்பாடு மற்றும் நலனோம்புச் செயற்பாடுகள்.



மாணவர்களுக்கான பற்சிகிச்சை முகாம்

கல்லூரிக்கென போதியளவு கல்விசாரா ஊழியர்கள் இல்லாதபோதிலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் மாணவர்களுக்கான மலசலகூட சுகாதார சேவைகள் நீர் வசதிகள் பராமரிப்புக்கள், மின்சார வசதிகள், பராமரிப்புக்கள் தரமான சிற்றுண்டிச்சாலை வசதிகள், சுற்றுச்சூழல் துப்புரவு சேவைகள் முதலியன பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- சுகாதாரத் தொழிலாளி, துப்புரவுத் தொழிலாளி, தோட்டத்தொழிலாளி, முகாமைத்துவ உதவியாளர், முதலியோருக்கான வேதனம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினாலேயே ஈடுசெய்யப்படுகின்றது.





- மாணவர்களுக்கான மருத்துவ வசதிகள் :

கல்லூரியில் சிறப்பான முதலுதவி அறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அன்றாடம் சுகவீனமுறும் மாணவர்கள் ஓய்வெடுக்கவும் தற்காலிக மருத்துவ வசதி பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தேவையேற்படின் அவர்களை வைத்தியசாலைக்கோ அல்லது அவர்களின் இருப்பிடங்களுக்கோ அழைத்துச் செல்வதற்கு முச்சக்கரவண்டிச் சேவையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான செலவுகளையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமே மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் மாணவர்களுக்கான வைத்தியப் பரிசோதனைகளை ஒழுங்காக மேற்கொள்வதற்கும் இந்த முதலுதவி அலகே பயன்படுத்தப்படுகின்றது.


கல்லூரியின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள், சுற்றுச்சூழல் அமைப்புக்கள், சாதனைகள் தொடர்பான படங்களின் தொகுப்பு இணைக்கப்பட்டுள்ளது.

## G.C.E.(O/L) - Religion




| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| Saivanery | 87 | 91 | 97 | 99 | 96 | 98 | 99 |
| Catholicism | 0 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| Christianity | 0 | 100 | 0 | 0 | 100 | 0 | 100 |

## G.C.E.(O/L) - Tamil Language




| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| Tamil Language | 83 | 79 | 83 | 86 | 86 | 89 | 93 |

## G.C.E.(O/L) - English




| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| English | 20 | 36 | 29 | 40 | 35 | 49 | 60 |

## G.C.E.(O/L) - Mathematics




| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| Maths (Tamil Medium) | 48 | 57 | 61 | 69 | 75 | 78 | 79 |
| Maths (English Medium) | 0 | 0 | 82 | 100 | 100 | 100 | 100 |

## G.C.E.(O/L) - Science




| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| Science(Tamil Medium) | 52 | 52 | 55 | 61 | 72 | 82 | 82 |
| Science(English Medium) | 0 | 0 | 73 | 93 | 86 | 92 | 100 |

## G.C.E.(O/L) - History




| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| History (Tamil Medium) | 66 | 80 | 68 | 58 | 70 | 84 | 79 |
| History (English Medium) | 66 | 0 | 91 | 93 | 0 | 100 | 100 |

## G.C.E.(O/L) - 1st Subject Group




| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| Business & Accounting Studies | 88 | 64 | 0 | 69 | 80 | 89 | 85 |
| Geography (Tamil) | 0 | 0 | 0 | 100 | 91 | 100 | 97 |
| Geography (English) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 100 |
| Citizenship Edu.(Tamil Medium) | 0 | 0 | 100 | 81 | 95 | 88 | 92 |
| Citizenship Edu.(English Medium) | 0 | 0 | 100 | 0 | 0 | 0 | 0 |
| Entreprenurship Edu (Tamil Med.) | 0 | 0 | 74 | 80 | 59 | 81 | 74 |
| Entreprenurship Edu(English Med.) | 0 | 0 | 100 | 0 | 0 | 0 | 0 |

## G.C.E.(O/L) - 2nd Subject Group



| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| Music (Carnatic) | 100 | 54 | 100 | 79 | 75 | 100 | 74 |
| Art | 0 | 60 | 100 | 100 | 100 | 100 | 83 |
| Dance | 0 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| Tamil Literature | 54 | 76 | 68 | 79 | 71 | 79 | 95 |
| English Literature | 0 | 75 | 50 | 85 | 86 | 86 | 100 |

## G.C.E.(O/L) - 3rd Subject Group



| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| In.Com.Tech.(Tamil) | 0 | 0 | 100 | 67 | 90 | 72 | 100 |
| In.Com.Tech.(English) | 0 | 0 | 100 | 100 | 100 | 100 | 100 |
| Agriculture | 75 | 61 | 88 | 53 | 90 | 100 | 100 |
| Design & Technology | 100 | 100 | 0 | 100 | 100 | 100 | 80 |
| Home Economics | 100 | 33 | 0 | 100 | 33 | 0 | 0 |
| Health & Phy. Edu.(T.M) | 98 | 91 | 100 | 100 | 86 | 92 | 97 |
| Health & Phy. Edu.(E.M) | 98 | 0 | 100 | 0 | 0 | 0 | 0 |

# அழகான சுற்றுப்புறச் சூழல்
























# அழகான சுற்றுப்புறச் சூழல்
















# ஒழுக்கசீலம் மற்றும் பாடசாலை நேயமுள்ள மாணவர்கள்





















# ஒழுக்கசீலம் மற்றும் பாடசாலை நேயமுள்ள மாணவர்கள்















# கல்லூரியின் விளையாட்டு நிகழ்வுகள்























# கல்விச் சுற்றுலா




















# அரங்கங்களில்



















## மூலிகைத் தோட்டம் மற்றும் பழமர நடுகை






















# மூலிகைத் தோட்டம் மற்றும் பழமர நடுகை

